★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ ONE : 556

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

சி. சுப்பிரமணியம் இராஜிநாமா?

★

சென்னை, ஜூன் 25—

தான் இராஜிநாமாச் செய்துவிட்டதாக உலவுகிற வதந்திகளை மறுத்துள்ளாராம், சென்னை நிதி மந்திரி கனம் சுப்பிரமணியம்!

சில வட இந்தியப் பத்திரிகைகளில், இந்த வதந்தி செய்தியாக வெளிவந்ததாகவும், அவை எந்தவித ஆதாரமும் அற்றவை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மலர் 4] சென்னை: ஆனி 13உ செவ்வாய் (26—6—56) ★ ★ வெளியூர்: ஆனி 14உ புதன் (27—6—56) [இதழ் 10

'குண்டடிபட்ட மூவர் குற்றவாளிகள்'

'நீதிமன்றம் கலையும்வரை காவல் தண்டனை'

'பதின்மூன்று பேர்கள் நிரபராதிகள்'

படுகாயமடைந்த இராமலிங்கம் வழக்கு ஒத்திவைப்பு

தம்மம்பட்டி வழக்கில் தீர்ப்பு

பிப். 20—அர்த்தால் சம்பந்தமாக ஆத்தூர் வட்ட தோழர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில், 25—6—56-ல், ஆத்தூர் 'சப்-மாஜிஸ்திரேட்' அவர்களால் தீர்ப்பு கூறப்பட்டது.

மொத்தம் 16 தோழர்கள்மீது வழக்கு தொடரப்பட்டது; 18 வாய்தாக்களுக்குப் பிறகு இன்றுதான் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

16 தோழர்களில் ஒருவரான இராமலிங்கம், துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயம் அடைந்து, ஆத்தூர் அரசாங்க மருத்துவ விடுதியில் இன்னும் சிகிச்சை பெற்று வருகிறார்.

தோழர் இராமலிங்கம் தவிர்த்து, எஞ்சியுள்ள 15 தோழர்களுக்குத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயம் அடைந்த தோழர்களான ஜி என். பெரியசாமி, பொன்னுசாமி, பாண்டுரங்கன் ஆகிய மூவருக்கும் கோர்ட் கலையும்வரை தண்டனையும், எஞ்சியுள்ள தோழர்கள் குற்றவாளிகள் அல்லர் என்றும் தீர்ப்புக் கூறப்பட்டது.

விடுதலையான தோழர்கள் :

இராமசாமி, மஜீத், சந்திரன், இராமானுசம், நடேசன், துரைசாமி, ஜெகநாதன், இராமஜெயம், சந்திரசேகரன் (பள்ளி மாணவத் தோழர் 5-ம் படிவம்), சீதாராமன், வையாபுரி, சீனன்.

கோர்ட் கலையும் வரை தண்டனை பெற்று, விடுதலை அடைந்த மூன்று தோழர்களும், 'குற்றவாளிகள் அல்லர்' என்று தீர்ப்புப் பெற்று விடுதலை அடைந்த தோழர்களும், ஆத்தூர் தி. மு. கழகத் தோழர்களும், மற்றுமுள்ள பொது மக்களும் ஒன்றுகூடிச் சென்று அரசாங்க மருத்துவ விடுதியில் சிகிச்சை பெற்றுவரும் தோழர் இராமலிங்கம் அவர்களைக் கண்டு ஆறுதல் கூறி, அவரவர்கள் ஊருக்குச் சென்றனர்.

தீர்ப்பைக் காண்பதற்காக ஏராளமான கழகத் தோழர்களும், எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., குப்புசாமி ஆத்தூர் செயலாளர் பி. எம். ரங்கசாமி, கே. எஸ். மணி, நாச்சிமுத்து, மா. மணி, இராமசாமி முதலியோரும், நரசிங்கபுரம், உலிபுரம், நாகிம்பட்டி, தம்மம்பட்டி, கூடமலை முதலிய ஊர்களினின்று கழகத் தோழர்களும், பொது மக்களும் நீதிமன்றத்தில் நிறைந்திருந்தனர்.

(ச.-கி.)

ரஷ்யாவின் மிகப்பெரிய விமானம்!

ஆற்றல் பற்றி விளக்கம்

மாஸ்கோ, ஜூன் 24—

ரஷ்யா 4 'ஜெட்' எஞ்சின்களால் இயங்கும் மிகப்பெரிய விமானத்தை நிர்மாணித்து வருவதாகவும் அவ்விமானம் 180 பிரயாணிகளுடன் மாஸ்கோவிலிருந்து நியூயார்க் மார்க்கத்தில் எங்கும் இறங்காமல் பறந்து செல்ல முடியுமென்றும் சோவியத் கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் குருஷ்சேவ் கூறியுள்ளார் எனத் தெரிகிறது.

பசிபிக்கிலுள்ள விளாடி வாஸ்டாக்குக்கும் அது தங்காமல் பறந்துசெல்ல முடியுமென்றும், இவ்வாண்டு இறுதியில் விமானம் பறக்கத் துவங்குமென்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நைல்நதிதீரத்தில்ஒருஇட்லர்!

ஜனநாயகப் போர்வையும் உண்டு!!

நாசீரிசம் துவக்கம்

நேருவின் நண்பர் தர்பார் அமைத்தார்

மத்திய கிழக்குப் பகுதியில், நைல் நதி தீரத்தில், புதிய இட்லர்—கர்னல் நாசீர் உருவில் முளைத்துவிட்டார்.

எகிப்து மக்களின் வாக்கெடுப்பு என்ற ஜனநாயகப் பொன்னுடை போர்க்கப்பட்டு இருக்கிறது, இப்புதிய இட்லர் நாசீருக்கு!

இந்தியப் பிரதமர் நேருவின் நண்பர்தான் நாசீர்! இருந்தால் என்ன?

நேருவின் எதிர்காலப் போக்கை முன்கூட்டி அறிவிக்கும் ஒரு அரும்பொருள் விளக்கமாக, நாசீர் ரூபத்தில் எகிப்தில் உருவெடுத்துள்ள புதிய இட்லரிசம் இருந்தாலும் இருக்கக்கூடும்.

கர்னல் நாசீரை நூற்றுக்கு நூறு சர்வாதிகாரியாக ஆக்கிவிடும் அபாயம், எகிப்து அரசியல் சட்டத்தின் வடிகட்டின சாரமாக இருந்துவருகிறது.

கர்னல் சாமெல் அப்டெல் நாசீ, எகிப்து குடியரசின் தலைவராக, நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

எகிப்து தேசிய புரட்சிக் குழு கலைக்கப்படுவதற்கு முன், கர்னல் நாசீரிடம் சர்வ அதிகாரத்தையும், அக்குழு ஒப்படைத்தது. நவம்பரில், தேசிய சபைக்கு தேர்தல் நடைபெறுகிறவரையில், எகிப்தின் தனிப்பெரும் சர்வாதிகாரியாக நாசீர் இருந்துவருவார்.

எகிப்துக்கு உருவாக்கப்பட்டுள்ள அரசியல் சட்டம், நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பின்மூலம், மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாக்கெடுப்பின்படி, நாசீர், ஆறு ஆண்டுக்காலத்திற்கு எகிப்து ஆட்சியின் தலைவராக ஆக்கப்பட்டு இருக்கிறார்.

அவரே, இராணுவத்தின் தனிப்பெரும் சேனாதிபதியாகவும் விளங்குவார்.

போர் தொடுக்கவும், அமைச்சர்களை நியமிக்கவும், விலக்கவும், உடன்படிக்கைகளைச் செய்யவும் நாசீர் அதிகாரம் பெற்றிருக்கிறார்.

அரசாங்க துரோகம், குடியரசைக் கவிழ்க்கச் சதிசெய்தல். ஆக இரண்டு குற்றங்களுக்காகவே, தலைவர் விலக்கப்பட வேண்டியவராவார்.

குற்றவாளிகளுக்கு மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் தலைவருக்கு இருக்கிறது. அதன்படி, 1954-ல், புரட்சிக் குழுவால் விலக்கப்பட்ட முன்னாள் தலைவர் ஜெனரல் நஜீப் அவர்களுக்கு, நாசீர் மன்னிப்பளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரூ. 2 லட்சம் செலவில் கோவிலுக்குக் கொடி மரம்

நாகர்கோவில் அருகேயுள்ள பறக்கை மதுசூதனப் பெருமாள் கோயிலுக்கு, 84 ஆண்டுகளாக கொடிமரம் இல்லாதக் குறையைப் போக்க, ஓராண்டிற்கு முன்பு 'போர்டார்' மேற்கொண்ட முடிவுப்படி ரூ. 2 இலட்சம் செலவில் கொடிமரம் செய்யப்பட்டு வருகிறதாம்!

கொடிமரத்துக்கு முலாம் பூச மொத்தம் 900 தோலா தங்கம் தேவைப்படுகிறதாம். தேவைப்படும் தங்கத்தின் விலை மட்டும் ரூ. 1 இலட்சமாகிறதாம்.

இந்தத் தங்கம், சுசீந்திரம், கன்னியாகுமரி ஆலயங்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறதாம். இதைத் தவிர, கொடி மரத்திற்கு வேண்டிய செம்பு முதலிய ஏனைய பொருட்களுக்கு ரூ. 1 இலட்சம் விலையாகிறதாம்.

ரூ. 2 இலட்சத்தை கரைத்து உருவாக்கப்பட்டுவரும் மதுசூதனப் பெருமாள் கோவிலின் பிரமாண்டமான கொடி மரம் முழுமையடைந்ததும் அதை வழிபடும்போது தனி திருவிழா ஒன்றும் நடைபெறவிருப்பதாகத் தெரியவருகிறது. இதற்காக வெகு மும்முரமான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றனவாம்.

சைபீரியாவில் நீர்வளிக் குண்டு பரிசோதனை?

டோக்கியோ, ஜூன் 25—

ஜப்பான் கடற்கரையில் வீழ்ந்த ரேடியக் கதிரியக்கச் சாம்பல்களைப் பரிசோதித்த ஜப்பானிய விஞ்ஞானியொருவர், ரஷ்யா ஜூன் திங்கள் 19-ம் நாள் சைபீரியாவில் ஒரு நீரவளிக்குண்டை வெடித்துள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்.

கேரளச் சொத்துக்கள் மீது கோபாலன் கரிசனம்!

சென்னை கடத்துகிறது என்ற வதந்தி கண்டு ஆத்திரம்

திருச்சூர், ஜூன் 24—

"தேக்குமரம், மற்றும் விலையுயர்ந்த பொருள்களை கேரளப் பிரதேசத்திலிருந்து (மலபார்) சென்னை சர்க்கார் கடத்திச் செல்வதை மத்திய சர்க்கார் தலையிட்டுத் தடுக்கவேண்டும்," என்று, தோழர் ஏ. கே. கோபாலன், டில்லிக்குத் தந்தி அடித்திருக்கிறாராம்.

இந்தத் தந்தியின் நகலை அவர், திரு-கொச்சி சர்க்காருக்கும் அனுப்பியுள்ளாராம்.

இதுபோன்ற வதந்திகளை மறுத்து சென்னை சர்க்கார், கடந்த வாரமே ஒரு பத்திரிகைக் குறிப்பு வெளியிட்டிருக்கின்றனர் என்றும், உரிய காலத்திற்கு முன்பு மரங்கள் வெட்டப்படவில்லை — யானைகள், வழக்கம்போலத்தான் இடம் மாற்றம் செய்யப்பட்டன என்றெல்லாம் அந்தக் குறிப்புக் கூறுவதாயும் தெரியவருகிறது.

சீனாவில் கூட்டுறவு விவசாய முறை

கண்டறிவதற்குத் தூதுக்குழு இந்தியாவிலிருந்து செல்கிறது

புதுடில்லி, ஜூன் 25—

சீனாவில் கூட்டுறவு விவசாயம் எப்படி நடைபெறுகிறது என்பதை நேரில் கண்டறியவும், குறிப்பாக சிறிய பண்ணைகளில் இந்தக் கூட்டுறவு முறை எப்படி நடைபெறுகிறது என்பதைக் கண்டறியவும் முன்னாள் திட்டக்குழு உறுப்பினர் ஆர். கே. படேல் தலைமையில் அறுவர் கொண்ட தூதுக்குழு ஒன்று ஜூலைத் திங்கள் துவக்கத்தில் சீனா செல்லுமாம். சீனாவின் விவசாய முறை எந்த அளவுக்கு நம் நாட்டில் பின்பற்ற முடியும் என்பது சிபாரிசு செய்யப்படுமாம்.

தோழர்களே, நீங்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டீர்களா—இல்லையெனில், உடனே பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம்

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 26—6—'56 செவ்வாய்

சத்திய சோதனை!

"தட்சிணப் பிரதேசத் திட்டத்தை ஏற்றுக்கொண்டால் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சென்னைக்கு மேலும் ரூ. 100 கோடி தருவதாக டில்லி அரசாங்கம் கூறி இருந்தது.

"மக்களின் பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதற்காக நமக்குக் கிடைத்த ஒரு பொன்னான வாய்ப்பை நாம் இழந்துவிட்டது, மிகமிக துரதிருஷ்டவசமானதாகும்."

இவ்வாறு மதுரை பொதுக் கூட்டம் ஒன்றில், சென்ற மூன்று திங்களுக்கு முன்பாக, மராமத்து அமைச்சர் இராஜேஸ்வர சேதுபதி அவர்கள் பேசி இருக்கிறார்கள்.

அமைச்சர் பதவியில் இல்லாது, அவரேகூட இவ்வாறு ஒரு செய்தியை அறிவித்திருந்தால், அதை ஒருவரும் பொருட்படுத்தி இருக்கமாட்டார்கள். அந்தச் செய்தி, செய்தித் தாள்களில்கூட இடம்பெற்றிருக்காது.

தட்சிணப் பிரதேசத்தை ஒப்புக்கொள்வதாக இருந்தால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மேலும் நூறு கோடி ரூபாய் தருவதாக இந்திய அரசாங்கம் கூறியதாகவும், அதை ஏற்க சென்னை அரசாங்கம் முன்வராமற்போனது துரதிருஷ்டவசமாகும் என்றும் மட்டுமே பொதுப்படையாக மராமத்து அமைச்சர் கூறியிருக்கிறார்.

குறிப்பிட்ட அமைச்சரால், அந்தச்செய்தி கூறப்பட்டதற்கு முன்பு, அந்தச் செய்திபற்றி எவரும் மூச்சுவிடவில்லை. அதற்குப் பின்னரும், அதுபற்றி மேற்கொண்டு விளக்கமாக, அவரோ மற்ற அமைச்சர்களோ ஏதும் பேசவில்லை.

அத்தகவலை அறிவித்த மராமத்து அமைச்சரும், அதுபற்றி மேலும் விளக்கமாக எதுவும் கூறாது இருந்து விட்டது போலவே, முதல் அமைச்சர் உள்பட மற்ற அமைச்சர்களும், அத்தகவலை உடனடியாக மறுக்கவோ ஏற்கவோ முன்வராது இருந்து விட்டனர்.

அதுபோன்றே, அத்தகவலின் உண்மைபற்றி ஏதும் கூறாது இந்திய அரசாங்கமும் இருந்து விட்டது.

மராமத்து அமைச்சர் கூறிய 100 கோடி ரூபாய் விவகாரத்தை முதல்முதலாக நாட்டுக்கு அறிவித்த இதழ் ஒரு ஆங்கில தினத்தாளாகும். தாம அவ்வாறு கூறாததாக இருந்தால் மராமத்து அமைச்சர் ஆங்கில தினத்தாளில் அந்தச்செய்தியை கட்டாயம் உடனடியாக மறுத்தே இருப்பார். பொதுக் கூட்டத்தில் தாம் அவ்வாறு கூறியது உண்மையாக இருந்த காரணத்தினால்தான், ஆங்கிலத் தினத்தாளில் வெளியான செய்தியை மறுக்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லாது போய்விட்டது.

மக்களின் உரிமையைக் காத்து வரவேண்டிய கடமை பத்திரிகைகளுக்கு உண்டு. மக்களின் உரிமைக் காப்பு, பத்திரிகைகளுக்குள்ள கடமைகள் அனைத்திலும் தலையாய கடமையாகும். அக்கடமை புனிதமானதுமாகும்.

மராமத்து அமைச்சர் குறிப்பிட்ட 100 கோடி ரூபாய் விவகாரம், உண்மையான செய்தியை அறிய மக்களுக்கு இருந்துவரும் நியாயமான உரிமைக்குக் கேடு சூழ்வதோடு மட்டுமே நின்றுவிடக் கூடியதன்று. தொடர்பு கொண்ட இரண்டு அரசாங்கத்தின் செயல்முறைகளையும் கறைபடுத்துவதுமாகும். எனவே, அமைச்சர் வெளியிட்ட தகவலின் மூலத்தைக் கண்டறிந்து விளக்கந்தர வேண்டிய பொறுப்பு பத்திரிகைகளுக்கு உண்டு. ஆனால், இந்த நாட்டு தேசிய ஏடுகளோ, அத்தகவல் பற்றி, வழக்கத்திற்கு மாறாக, இன்றுவரை அலட்சியமாகவே இருந்துவிட்டன.

மராமத்து அமைச்சர் கூறிய 100 கோடி ரூபாய் தகவல் பரபரப்பையூட்டக் கூடியதாகும். ஆனால், அப்பரபரப்பு தேசிய ஏடுகளைத் தீண்டவே இல்லை. தேசிய ஏடுகள் கடைப்பிடித்த பொறுமையும், மவுனமும், குறிப்பிடத் தகுந்த இரண்டொரு தேசிய ஏடுகளின் அலுவலகத்திலிருந்து உருவாக்கப்பட்ட சதித் திட்டம்தானோ, மராமத்து அமைச்சர் வாய் மூலம் வெளியாகி இருக்கிறது என்ற யூகத்திற்கும் இடம் தருவதாக இருக்கிறது.

மராமத்து அமைச்சர் வெளியிட்ட நூறு கோடி ரூபாய் விவகாரத்திற்குத் துளியும் ஆதாரம் கிடையாது என இந்திய அரசாங்க நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். தாமாக முன்வந்து நிதி அமைச்சர் அவ்வுண்மையைக் கூறவில்லை. சென்னை பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கே நிதி அமைச்சர் மேற்குறித்த மறுப்பைக் கூறியுள்ளார்.

இந்திய அரசாங்க நிதிமந்திரியைக் கேட்டு உண்மை அறிய வேண்டும், அதை நாட்டு மக்களுக்கும் அறிவிக்க வேண்டும் என இப்பொழுது ஆசை காட்டிய நிருபர்களுக்கு, அதை முன்னரே—மராமத்து அமைச்சர் அதைக் கூறியபொழுதே—தக்க இடத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை எழாதிருக்கக் காரணம் என்ன? ஆசை ஏற்பட்டும் அதை அடக்கிக்கொண்டிருந்தனர் நிருபர்கள் என்றால், அதற்கு விசேட பொருள் இருக்கத்தான் வேண்டும் என எப்படி எண்ணாமல் இருப்பது?

நூறு கோடி ரூபாய் தகவலுக்கு ஆதாரமே கிடையாது என இந்திய அரசாங்க நிதி அமைச்சர் இப்பொழுது அறிவித்துள்ளார். அவர் அறிவிப்பு, வேறு சில கேள்விகளுக்கும் இடமளிக்கிறது.

அதாவது, ஆதாரமில்லாத அச்செய்தியை இந்திய அரசாங்கச் சார்பில் இதுவரை மறுக்கப்படாததற்கு ஏது காரணம்? இந்திய அரசாங்கத்தைச் சந்தேகத்திற்குள்ளாக்கும் அப்பொய்ச் செய்தியைத் தந்தவர் ஒரு சாதாரண நபரல்ல. ஒரு மாகாணத்தின் அமைச்சர் அப்பித்தலாட்டத்தைச் செய்திருக்கிறார். அமைச்சரைக் கண்டித்துத் திருத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் கொண்டிருக்கிற இந்திய அரசாங்கம் வாய் மூடி இருந்திருக்கிறது. ஏன் இப்படி இந்திய அரசாங்கம் அசமந்தமாக நடந்து கொண்டிருக்கிறது?

'காங்கிரஸ் அமைச்சர் பொய் சொன்னாலும் பாதகமில்லை—எப்படியாவது தட்சிணப் பிரதேசம் அமைக்க வாய்ப்பு நேர்ந்தால் போதும்' என்ற நினைப்பில்தான், இந்திய அரசாங்கமும், மராமத்து அமைச்சரின் பித்தலாட்டப் பேச்சைக் கண்டும் காணாததுபோல் இருந்திருக்கிறது என்றே எவரும் கொள்ளுவர். வேறு விளக்கம் கிடைக்கின்ற வரை, இதைத் தவிர வேறு முடிவை எவரும் கொள்வதற்கில்லை.

மராமத்து மந்திரியின் சிறுபிள்ளைத்தனத்தை, காங்கிரஸ் கட்சியும் கண்டிக்க முன்வரவில்லை. அதுவும் கண்மூடி மவுனியாகவே இதுவரை இருந்து வந்திருக்கிறது.

தேசிய ஏடுகள்—காங்கிரஸ் அரசாங்கம்—காங்கிரஸ் கட்சி—ஆகிய அனைத்தும் சேர்ந்து செய்துவரும் 'சத்திய சோதனை' என்றுதான் இவ்விவகாரத்தைக் கூறவேண்டும். இத்தகு 'சத்திய சோதனை'யிலிருந்து நமது மக்களை விடுதலை செய்வதுதான் நமது முதற் கடமையாக இருக்கவேண்டும்.

சுதந்திரப் போர் வீரர்களுக்கு

நினைவுச்சின்னம்

ரூ. 10 இலட்சம் செலவில் அமையும்

நைனிடால், ஜுன் 25—

சுதந்திரப்போராட்டத்தில் பங்கேற்று தொண்டாற்றிய தியாகிகளுக்கு ரூ. 10 இலட்சம் செலவில் இலட்சுமணபுரி, மீரட், கான்பூர் பிதூர், அலகாபாத், ஜான்சி, காசி ஆகிய இடங்களில் அடுத்த ஆண்டு மே திங்களுக்குள் நினைவுச் சின்னங்கள் திறவப்பட்டு விடுமாம்.

1921-லிருந்து 1942-ம் ஆண்டு வரை சுதந்திரப்போரில் உயிர் நீத்தவர்களுக்கு நினைவுத் தூண்கள் இலட்சுமணபுரியில் திறவப்படுமென்றும், 1857-ம் ஆண்டு முதல் சுதந்திரப் போரின் நினைவுச் சின்னம் மீரட்டில் அமைக்கப்படுமென்றும், பிதூரில் நானாசாகிப்புக்கு நினைவுச்சின்னம் அமைக்கப்படுமென்றும், ஜான்சியில் இராணி இலட்சுமிபாய்க்கு நினைவுச்சின்னம் கட்டப்படுமென்றும், காசியில் ராஜாசெட் சிங்கிற்கும், அலகாபாத்தில் சந்திரசாகர் ஆசாதுக்கும் நினைவுச் சின்னங்கள் திறவப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது

காஷ்மீருக்கு உள்ளே பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தானுக்கு இராணுவ அதிகாரி யோசனை!

கராச்சி, ஜுன் 24—

"காஷ்மீர் பள்ளத்தாக்கில் மிகப் பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டம்—கிளர்ச்சி நடத்துவதின் மூலம், இந்தியா, காஷ்மீரைக் கைவிடுமாறு நிர்ப்பந்திக்கப்பட வேண்டும்,"

என்று, பாகிஸ்தான் இராணுவத்தின் முன்னாள் மேஜர்—ஜெனரலான அக்பர்கான் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

காஷ்மீர் யுத்தத்தின்போது பிரதம தளபதியாகவிருந்த இவர், மேலும் பேசும்போது 'இப்படிக் கிளர்ச்சி நடத்தும்போது, இந்தியா யுத்தத்தில் இறங்கினால், பாகிஸ்தான், அந்த அறைகூவலை ஏற்றுக் கொள்ளவேண்டும்' என்றும் குறிப்பிட்டாராம்.

முகம்மதியப் பெண்களின் வெற்றி!

'பலதார மணம் தனி நபரின் விருப்பமாதல் கூடாது'

'இரண்டாம் தாரம் மணந்து கொள்ள நீதிமன்ற அனுமதி வேண்டும்'

பாக். விசாரணைக் குழு சிபாரிசு

கராச்சி, ஜுன் 24—

"பல தார மணம், தனி நபரின் விருப்பத்திற்கு உரியதாக ஆக்கப்படக்கூடாது," என்று பாகிஸ்தான் விசாரணைக் குழு ஒன்று தீர்ப்பளித்திருக்கிறது.

'பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசில் வாழும் எவரும், இரண்டாந்தாரமாக ஒருவரை மணந்து கொள்ளவேண்டும் என்று விரும்பினால், முதலில் திருமண நீதி மன்றம் ஒன்றின் அனுமதி பெற வேண்டும்'

என்றும் அந்த விசாரணைக் குழு கூறியிருக்கிறது.

பல தார மணம் என்ற விவகாரம் கடந்த சில ஆண்டுகளாக, பாகிஸ்தான் மக்களின் சிந்தனைப் பொருளாக இ[illegible]துவருகிறது.

முன்னாள் பி[illegible]ரும் இப்போது அமெரிக்காவில் தூதுவராக உள்ளவருமான முகம்மது அலி, தனது அந்தரங்க காரியதரிசியை இரண்டாம் மனைவியாக்கிக் கொண்ட போது, இந்த விவகாரம் பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது! பாகிஸ்தான் பெண்கள் சங்கம், புயலெனச் சீறி எழுந்தது! போர்க் கோலம் பூண்டனர்—பெண்களுக்கு உரிமையும் பாதுகாப்பும் கோரி!

அதன் விளைவாக, கடந்த ஆண்டு ஆகஸ்டு திங்களில், நான்கு ஆண்கள்—மூன்று பெண்கள் அடங்கிய விசாரணைக் குழு ஒன்று, திருமணம், மற்றும் குடும்பச் சட்டங்கள் பற்றி ஆராய்ந்து கூறுவதற்காக நியமிக்கப்பட்டது.

இன்று அந்தக் குழு தந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

"இரண்டாம் மனைவி கட்டிக் கொள்வது, சில சந்தர்ப்பங்களில் நியாயமானதாகக்கூட இருக்கலாம்; ஆனால், அது நீதி மன்றம் ஒன்றின் அனுமதியுடனேயே நடைபெற வேண்டும் என்ற நிபந்தனையுடையதாக்கப் படவேண்டும்.

"அந்த நீதி மன்றம், ஒருவர் இரண்டாம் மனைவி வேண்டுமெனக் கோருவதில் பகுத்தறிவு பூர்வமான நியாயம் இருப்பதாக உணருமானால், அதனை அனுமதிக்கலாம்; ஆனால், அப்படி அனுமதிக்கும்போது, ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளையும், குழந்தைகளையும் நேர்மையுடன் பராமரிக்கப் போதுமான ஆற்றல் பெற்றவராக கணவன் இருக்கிறாரா என்பதையும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

"பெண்கள் நீதி பெற, நீதி மன்றத்திற்கு வரவேண்டும் என்பது அநியாயமானதாகும்; இயலாததாகும்; ஏனெனில், நமது சமுதாயத்தின் இன்றைய நிலையில், பெண்கள், ஏழ்மை—உதவியற்ற நிலை—சமூக நிர்ப்பந்தம் ஆகியவற்றினால் அடக்கிவைக்கப் பட்டிருப்பதினால், சட்டத்தின் துணை மூலம் நீதிமன்றத்தில் நியாயம் பெற இயலாதவர்களாயிருக்கின்றனர்," என்றெல்லாம் அந்த விசாரணைக் குழு தெரிவித்திருக்கிறது.

இரஷ்யாவின் கடற்படை ஆற்றல்

அமெரிக்க அதிகாரி பேச்சு

வர்ஜீனியா, ஜுன் 23—

"கப்பல் அல்லது நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து மின்சார அலை மூலம் செலுத்தக்கூடிய பறக்கும் குண்டுகளை இரஷ்யா விரைவிலேயே தயாரித்துவிடும். இரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல்கள், அமெரிக்கக் கடற்கரையிலிருந்து நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து கொண்டே அமெரிக்காவின் உட்புறப் பகுதிகளில் உள்ள நகரங்களை அழித்துவிட முடியும்; எதிரி நீர்மூழ்கிக் கப்பல்களைத்தான் அமெரிக்கா சமாளிக்கவேண்டிய மிகவும் கடினமான பிரச்சினையாக இருக்கும். இதற்குத்தான் கடற்படை அதிக முக்கியத்துவம் அளிக்கிறது" என்று, அமெரிக்கக் கடற்படைத் தலைவர் அட்மிரல் ராலே பர்க் பாதுகாப்பு மாநாடு ஒன்றில் கூறியுள்ளார்.

அணுசக்தியால் இயங்கும் எஞ்சின்

இரஷ்யாவில் இருக்கிறதாம்

வாஷிங்டன் ஜுன் 23—

இரஷ்யாவில் அணுசக்தியினால் இயங்கும் இரயில்வே எஞ்சின் நிச்சயமாக இருக்கும் என்றும் இரஷ்ய வெற்றியை பார்த்தாவது அமெரிக்கா இது குறித்து வேகமாக ஆக்கவேலைகளில் ஈடுபட வேண்டுமென்றும் அமெரிக்க 'செனட்டர்' ஒருவர் கூறியுள்ளார்.

விபத்துக்களின் போது சிகிச்சையளிக்க!

நவீன இரயில் மருத்துவ வண்டி

இரயில் விபத்துக்கள் ஏற்படும் போது, அந்த இடத்திற்குச் சென்று வைத்திய உதவி அளிப்பதற்காக, 'மருத்துவவண்டி' ஒன்றை இப்பொழுது மத்திய இரயில்வே தயாரித்திருக்கிறது 'பிராட்கேஜ் பாதை'யில் உபயோகிப்பதற்கான இந்த வண்டி நவீன சாதனங்கள் கொண்ட ஒரு சிறிய மருத்துவ மனையாகவே அமைந்திருக்கிறது.

இந்தகைய வண்டி இந்தியாவில் உபயோகத்துக்கு கொண்டுவரப்படுவது இதுவே முதல் தடவையாகும் அவசரமாகச் செய்யவேண்டியிருக்கும் இரண சிகிச்சைகளை மேற்கொள்ளுவதற்கு வசதியாக 'ஆபரேஷன் தியேட்டர்' ஒன்றும் இவ் வண்டியில் அமைக்கப்பட்டுள்ளது; வண்டி ஓடும்போது, இந்தத் தியேட்டர், ஆடாமல் அசையாமல் இருப்பதற்காக, போர்க் கப்பல்களில் உள்ளதுபோன்ற நவீன 'அதிர்ச்சி தாங்கி' ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த வண்டியில் மருத்துவ நிபுணர்கள் தங்கியிருக்க ஒரு தனி அறையும், ஒருசமையலறையும் உள்ளன குகைப் பாதையிலும் இதை உபயோகிக்கக் கூடியபடி, வண்டியின் ஒரு கோடியில் ஒரு வழி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மருத்துவ வண்டியில் வழக்கமான வைத்தியச் சிப்பந்திகளையும், நர்சுகளையும் தவிர, இரயில்வேயின் 'செண்ட் ஜான் ஆம்புலன்ஸ் படை'யைச் சேர்ந்தவர்கள் சிலரும் இருப்பார்கள். இவர்கள் 'இரத்த தானம்' வழங்குபவர்கள்; இவர்களுடைய இரத்தங்கள் முன்னதாகவே சோதிக்கப்பட்டு பாகுபாடு செய்யப்பட்டிருக்கும்; அவசியமிருக்கும் போது தங்கள் இரத்தத்தைக் கொடுத்து உயிரைக் காப்பாற்ற இவர்கள் தயாராக இருப்பார்கள்.

அமெரிக்காவில் மக்கள் தொகை அதிகரிப்பு

மே 1-ந் தேதி அமெரிக்காவின் மக்கள் தொகை சுமார் 16.76,49,000 ஆக இருந்ததாம்! 1950-ம் ஆண்டைவிட இந்த எண்ணிக்கை சுமார் 11 சதவிகிதம் அதிகமாகும்.

கழகச் செய்திகள்

குன்னத்தூரில் தி. மு. க. பொதுக்கூட்டம்

17-6-56 இரவு 7-30 மணியளவில், தேர்த்திடலில், தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் கு. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பரசு, எஸ் அப்பாவு, சிற்றுளி சுப்பிரமணியம் ஆகியோர் திராவிட நாடு வேண்டியதன் அவசியம் குறித்தும், மாற்றுக்கட்சிகளின் பொய்ப் பிரச்சாரத்தைக் கண்டித்தும் பேசினர்.

தாராபுரத்தில் தி. மு. கழக பொதுக்கூட்டம்

17-6-56 மாலை 6 மணியளவில் தாராபுரம் தி மு கழகச் சார்பில், இஸ்லாமியாபேட்டையில் எஸ். எ குஞ்சு தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அறிவழகன், தாரை எழிலன், தமிழரசு, கோவை-செழியன் ஆகியோர் 'மாநாட்டு முடிவுகள்' என்னும் பொருள் பற்றி விளக்கிப் பேசினர். கூட்டத்தில் நடிகை தோழியர் எம். ஆர் சந்தானலட்சுமி, அழகிரி துணைவியார் எத்திராசு அம்மையார் ஆகியோர் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்தும், என் ஜி ஓக்களின் குறைகளை நீக்காது காலம் தாழ்த்தும் அரசியலாரின் போக்கை வன்மையாகக் கண்டித்தும், உடனடியாக அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அரசியலாரை கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

திருச்சிற்றம்பலம் தி- மு. கழகத் திறப்பு விழா

16-6-56 மாலை 5-30 மணிக்கு திண்டிவனம் வட்டத்தைச்சேர்ந்த திருச்சிற்றம்பலம் எனும் சிற்றூரில் தி மு. கழகத் திறப்புவிழா, தோழர் நாதமுனி தலைமையில் நடைபெற்றது. தோழர் இரா. சாம்பசிவம் கழகக் கொடி ஏற்றி வைத்தார். தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் கழகத் திறப்பு விழாவாற்றினர். கழகச் செயலார் நன்றி நவின்றார்.

பூத்துறை தி. மு. கழகத் திறப்பு விழா

16-6-56 இரவு 8 மணிக்கு, புதுவைக்கு அருகிலுள்ளதும் திண்டிவனம் வட்டத்தைச் சார்ந்ததுமான பூத்துறையில், தி. மு. கழகத் திறப்பு விழா தோழர் இரா சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது. வழக்கறிஞர் சு. பெருமான் கழகக் கொடி ஏற்றிவைத்தார். தோழர் ச. சிவப்பிரகாசம் சிறிது நேரம் பேசியபின், தோழர் ஏ கோவிந்தசாமி எம். எல் ஏ அவர்கள் கழகத்தைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினர் தோழர் திருக்காமு நன்றி கூறினர். 10 மணிக்குக்கூட்டம் முடிவுற்றது.

பொள்ளாச்சி தி. மு. க.

22–6–56 இரவு 10 மணியளவில், கழகக் கட்டிடத்தில், கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் மு. தேவராசன் தலைமையில் நடைபெற்றபோது, கோவை மாவட்ட 3-வது மாநாட்டை பொள்ளாச்சியில் நடத்தவேண்டுமென கோவை மாவட்ட செயற்குழுவை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதுடன், முறையே கழகச் செயற்குழு உறுப்பினராகவும், மாவட்டக்குழு உறுப்பினராகவும் இருந்து வந்த தோழர்கள் பி. கே. முத்து, அ. ச. பாலு ஆகியோர் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டு, மாவட்டக் குழு உறுப்பினராகத் தோழர் சதாசிவமும், செயற்குழு உறுப்பினராகத் தோழர் தேவராசவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 3-வது வட்ட தி. மு. கழகம்

22—6—56 இரவு 7 மணிக்கு, கழகப் பணி மனையில் தோழர் மு. இராமையா தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், செயலாளர் செயசீதம் அவர்களின் தந்தையார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், வரவு - செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாலராமபுரம் தி.மு. கழகம்

15–6–56 இரவு, பாலராமபுரம் (மலபார் பகுதி) தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. மாநில மாநாட்டிற்குச் சென்றிருந்த தோழர் கலையன்பன், மாநாட்டின் தீர்மானங்களையும், இதர விவரங்களையும் விளக்கினர். கேரள, கன்னட, ஆந்திரப் பகுதிகளில் கழகக் கொள்கைகளைப் பரப்ப ரூ. 5,000 செலவிட வேண்டுமென மாநில மாநாடு முடிவு செய்திருப்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கப்பட்டது. கேரளப் பகுதிகளில் செய்யப்பட்டுவரும் தி. மு. கழகக் கிளைகளை எல்லாம் ஒன்று சேர்த்து கேரளக் குழு ஒன்று அமைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. கேரளத்தில் கழகப் பிரச்சாரம் செய்ய அமைக்கும் மலையாள நாடகக் குழுவிற்கு இந்தக் கிளையிலிருந்து, தோழர்கள் அருணாசலம், கலையன்பன், நடராசன், கிருஷ்ணன் முதலியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வாரந்தோறும் கொள்கை விளக்கக் கூட்டங்கள் நடத்த வேண்டுமென்ற முடிவுடன் கூட்டம் முடிவடைந்தது

பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயற்குழு

10—6—56 மாலை 4 மணிக்கு, பெங்களூர்—பினாக்பள்ளி கழக மனையில, தோழர் எஸ் வி பதி தலைமையில் மாவட்டச் செயற்குழு நடைபெற்றபோது, கோலார் தங்கவயல் ஆண்டர்சன்பேட்டை தி மு கழகச் செயலாளர் கே. ஜி சின்னராசன், அழகிரியின் துணைவியார் எத்திராஜ் அம்மையார் ஆகியோர் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. பின்னர், பெங்களூரில், தி. மு. கழகம் தொழிற்சங்கத் துறைகளில் பணியாற்றுவது பற்றி தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு, தொழிலாளர்த் தோழர்கள் தங்களின் எண்ணங்களை உடனடியாக மாவட்டச் செயலாளருக்கு எழுதும்படி கேட்டுக்கொண்டும், தி மு கழக கொடியையும், தலைவர் படங்களையும் தவறான வகையில் பயன்படுத்தும் மன்றங்களைகளையும் கண்டிக்கும் வகையில் மாவட்டச் செயலாளர் அறிக்கை வெளியிட வேண்டுமென மாவட்டத்தின் சார்பில் சொற்பயிற்சிக் குழு நிறுவ வேண்டுமென்றும், அதற்கான பொறுப்பை ஏற்குமாறு தோழர் வே. இளஞ்சேரன் அவர்களைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவெண்காடு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

19—6—56 மாலை கழகச் சார்பில் தோழர் குசலவன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பத்மநாபன், என். கிட்டப்பா ஆகியோர் பேசிய பின்னர், தோழர் கி மனோகரன் 'தற்கால அரசியல் நிலை' பற்றியும், தி. மு. கழகம் தேர்தலில் என் ஈடுபடுகிறது?' என்பது குறித்தும் விரிவுரையாற்றினர்.

இலங்கை—பொரளை தி. மு. கழகக் கிளை

17—6—56-ல், தி. மு. கழகக் கிளையின் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் தோழர் வீரா. மன்னர்மன்னன் தலைமையில் நடைபெற்றபோது, 5—6—56-ல், சிங்கள மொழி மசோதாவை எதிர்க்கும்முகத்தான், தமிழுக்கும் சம உரிமைகோரி பாராளுமன்றம் முன்பாக அமைதியான முறையில் எதிர்ப்பைக் காட்டிய அறப்போர் வீரர்களை ஆட்சியாளர் கொடுமைப் படுத்தியும், இதையே காரணமாகக் கொண்டு தமிழர் உரிமைப்போரை ஒழித்துக்கட்ட இங்குள்ள எல்லாத் தமிழர்கள் மீதும் கொடுமை பல செய்துள்ள ஆட்சியாளரை வன்மையாகக் கண்டித்தும், உயிர் இழந்து, பொருள் இழந்து நிற்கும் தமிழ் மக்களுக்கு நஷ்டஈடு கொடுக்க ஆட்சியாளரைக் கேட்டுக்கொண்டும், இலங்கைவாழ் தமிழ் மக்களின் உரிமைப்போரை உதாசீனப்படுத்தி தனிச் சிங்களமொழி மசோதா ஆட்சி மொழியாக நிறைவேறியதைக் கண்டித்தும், ஜனநாயக முறையில் தமிழுக்குரிய உரிமை கிடைக்கும்வரை போராட வேண்டுமென்றும், அறப்போர் வீரர்கள் அனைவருக்கும் வீர வணக்கம் செலுத்தியும், தோழர்கள் எம். எஸ். பாண்டியன், வே. கா. திராவிடமணி, வீரா. மன்னர்மன்னன் ஆகியோரைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்கராபுரம் தி. மு. கழகத் துவக்க விழா

16—6—56 மாலை 6 மணியளவில், சங்கராபுரம் தி மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் ஏ. முருகு, தலைமையில் நடைபெற்றது. தோழர் சம்சுதீன் கொடியேற்றிவைத்தார். தோழர்கள் டி. பி. கேசவன், ந நாச்சியப்பன், வாசு, அம்பாயிரம் ஆகியோர் பேசிய பின்னர், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 'தி. மு, கழகம் என் தேர்தலில் ஈடுபடுகிறது?' என்ற காரணங்களை விளக்கி, அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் சம்பத் அவர்களுக்கு சங்கராபுரம், தேவடாண்டலம், அரசம்பட்டு, செல்லம்பட்டு, வடசிருவளூர் குசப்பாடி, செம்பராம்பட்டு, சோழம்பட்டு ஆகிய சிற்றூர் கிளைக் கழகத் தோழர்களால் கைத்தறி ஆடைகளும, மலர்மாலைகளும், தோழர் க. வேலாயுதம், தோழர் முபாரக் ஆகியோரால் கைத்தறி ஆடைகளும், அணிவிக்கப்பட்டன. உலகுடையாம்பட்டு தோழர்களால் 'நம் நாடு' வளர்ச்சிக்கு, ரூ. 1-ம், வடக்கனந்தல் தி மு. கழகத் தோழர்களால் தேர்தல் பிரச்சாரக் குழு நிதிக்கு ரூ. 2-ம் அன்பளிப்பாகத் தரப்பட்டது. தோழர் மா. முனுசாமி நன்றி நவின்றார்.

பம்பாய் மந்திரிகளுக்குக் கருப்புக். கொடி

பதவியிலிருந்து விலகக் கோரி மராட்டியர் ஆர்ப்பாட்டம்

நாசிக் ஜுன் 24—

பம்பாய் மந்திரிகள் இருவருக்கு எதிராக கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது.

மராட்டியர்களான அந்த இரு மந்திரிகளும், பம்பாய் மராட்டியத்துடன் இணைக்கப்படாததை எதிர்த்துப் பதவியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டிருக்கின்றனர்.

எம். எம். நாயக் நிம்பல்கார், ஜி. டி. தாப்சே ஆகிய அந்த இரு மந்திரிகளும், இது குறித்து ஏதும் கூறியதாகத் தெரியவில்லை.

ஆனால் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்திய சம்யுக்த மராட்டிய இயக்கத்தைச் சேர்ந்த நால்வரை போலீசார் கைது செய்தனர் என்று தெரிய வருகிறது.

பாழாகாத பருத்தி ஆடை!

லண்டன், ஜுன் 22—

பழச்சாறு, மசி, வர்ணம் ஆகியவற்றால் பாழாகாத பருத்தி ஆடையை லண்டன் நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளதாம். கறைபட்ட துணியின் பாகத்தை நீரில் நனைத்து துணியை உதறினால், கறை நீங்கிவிடுமாம். நூலில் இரசாயனம் கலவை செய்து செய்யப்படும் இந்த ஆடை, முரட்டுச் சலவையையும் தாங்குகிறது என தயாரிப்பாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

எட்டு பொருள்களுக்கு ஒரு முனை விற்பனை வரி விதிப்பு

சென்னை சர்க்கார் முடிவு

சென்னை, ஜுன் 23—

சர்க்கரை, காப்பி, தேயிலை, சிமெண்ட், மோட்டார்கார், குளிர் சாதனப் பெட்டி முதலிய முக்கிய 8 பொருள்களுக்கு சென்னை அரசியலார் ஒரு முனை விற்பனை வரி விதிப்பதென இறுதியாக முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறதாம்.

அந்தச் சாமான்களுக்கு விதிக்கப்படும் ஒரு முனை விற்பனை வரி விகிதம் இன்றுள்ள வரிவிகிதத்தை விட அதிகமாயிருக்குமெனக் கூறப்படுகிறது.

தற்போது விதிக்கப்படும் பல முனை விற்பனை வரியைப் போல இரண்டு முதல் மூன்று மடங்கு வரை புதிய ஒரு முனை விற்பனை வரி இருக்குமெனத் தெரிகிறது.

சிறு நாடுகளில் 'கண்ணி'வைக்கும் பெரிய நாடுகள்!

இரங்கூன், ஜுன் 23—

"சிறு சிறு நாடுகளில் தங்களின் கையாட்களையும், 'ஏஜெண்டு'களையும் நியமித்துவைக்கும் முறையை பெரிய நாடுகள் பின்பற்றுவது அதிகமாகிக்கொண்டு வருகிறது; இரகசியச் சதிவேலைகள் மூலம் சிறு நாடுகள் வலைக்குள் இழுக்கப்படுகின்றன," என்று, பர்மாவின் முன்னாள் பிரதமர் ஊ-நு எச்சரித்துள்ளார்.

க்ஷயரோகிகளும் மனிதர்கள்தான்!

இலட்சுமணபுரி, ஜுன் 23—

க்ஷயரோகிகளும் மனிதர்கள் தான்; விஷப்பரிட்சைகள் செய்து பார்ப்பதற்கு அவர்கள் பன்றிகள் அல்ல" என்று, க்ஷயரோகிகளின் சிகிச்சைக்கு பி. சி. ஜி உபயோகிக்க மாநில அரசினர் செய்துள்ள முடிவை எதிர்த்து, இங்குள்ள ஓமியோபதி வைத்தியர்கள் தீர்மானம் ஒன்றுநிறைவேற்றியுள்ளார்.

56-வது வயதில் பி. ஏ. தேறியவர்

திருச்சி, ஜுன் 22—

தென்னூர் உயர்தர துவக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஏ. வி. ரங்காராவ் என்பார் தனது 56-வது வயதில் இவ்வாண்டு பி. ஏ. தேர்வில் தேறியுள்ளார்!

வெள்ளையர் காலத்தில் ஜாவா சர்க்கரை— வடவர் காலத்தில் உ. பி. சர்க்கரை!

அன்றும் இன்றும் சந்தையாகும் தென்னாட்டின் அவலம்!

புதுடில்லி, ஜூன் 24—

தென்னாட்டில் சர்க்கரை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இடங்களுக்கு, வடநாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளிலிருந்து சர்க்கரை அனுப்ப தனி இரயில்விட இந்தியப் பேரரசு ஏற்பாடு செய்துள்ளதாம். இந்த சர்க்கரை தனி இரயில்கள் அடுத்த வாரத்திலிருந்து செல்லத் துவங்குமாம்.

தென்னாடு ஒவ்வொரு ஆண்டும் 2 இலட்சம் டன் சர்க்கரையை பயன்படுத்துகிறது. இதில் 1 இலட்சம் டன் சர்க்கரைதான் தென்னாடு உற்பத்தி செய்கிறதென்றும், மீதி வடநாட்டிலிருந்து வருகிறதென்றும் கூறப்படுகிறது.

சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, பெங்களூர், கொச்சி போன்ற முக்கிய நகரங்களில் போதிய சர்க்கரை தேக்கம் வைத்திருக்க இந்திய சர்க்கார் எண்ணமிட்டுள்ளனராம்.

'திட்டம் இயங்குவது எப்படி?'

"நாம் வெளிநாட்டு உதவித் திட்டத்தின் வெற்றியை பரீட்சித்தறிவது நன்றியினாலோ, சொற்படி நடப்பதினாலோ அல்ல; நம் சுதந்திரத்துக்கு ஆக்கமளிக்கும் மற்ற சுதந்திரங்களை வேறிடங்களில் அது இன்னும் தீவிரமாக்குகிறதா என்பதினால்தான். இத்தகைய பரீட்சையால் நம் திட்டம் இயங்குகிறது,"

என்று, அமெரிக்க வெளிநாட்டுக் காரியதரிசி டல்லஸ் கூறியுள்ளார்.

'உதவி' வந்துவிட்டது!

கராச்சி, ஜுன் 23—

பாகிஸ்தானுக்கு அமெரிக்க இராணுவ உதவியளிக்கும் திட்டத்தின்கீழ், 40 'ஜெட்' போர் விமானங்களை ஏற்றிக்கொண்டு முதல் கப்பல் வந்திறங்கியதாக செய்தி ஒன்று, அறிவிக்கிறது.

காங்கிரசில் கரைந்துவிட்ட உழைப்பாளர் கட்சி

'கோழி' சின்னம் கைமாறுகிறது

புதுடில்லி, ஜூன் 23—

உழைப்பாளர் கட்சி, இந்திய தேசிய காங்கிரசுடன் இணைந்து விட்டதினால், இதுவரையில் அக்கட்சிக்கு அளிக்கப்பட்டிருந்த ஒப்புதலைத் திரும்பப்பெறுவதென தேர்தல் குழு முடிவு செய்துள்ளதாம்.

அக்கட்சிக்கென ஒதுக்கப்பட்டிருந்த 'சேவல்' சின்னத்தை, இனி சென்னை மாநிலத்தில் நடைபெறுகிற தேர்தல்களில் வேறு எக்கட்சியினரும் தங்களின் தேர்தல் சின்னமாக கேட்டு பெற்றுக் கொள்ளலாம்.

‘கழ[illegible]தைப் பற்றி காமராசர்கள் கூறுவது குருடர் யானை பார்த்த கதை போன்றதே’

‘கழகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் சாமானியர்களே— ஆனால் கழகத்தின் கொள்கைகள் குறையற்றனவாகும்’

‘ஆராய்ச்சி செய்வதை விட— தங்கம் தோண்டுவதைவிட கடினமானது கழகத்தின்பணி’

தளவாய்புரம் பொதுக்கூட்டத்தில்

அண்ணா விளக்கம்

"கோலாரில் தங்கம் கிடைக்கிறது; தங்கம் கிடைக்கிறது என்றால், காயாக மரத்தில் காய்த்துத் தொங்கவும் இல்லை; அல்லது, பூமியில் கட்டி கட்டியாக—பாளம் பாளமாகப் புதைந்தும் இல்லை; நாலாயிரம் ஐயாயிரம் அடிக்குக் கீழே குடைந்து சென்று, அங்குள்ள தங்கம் கலந்த மண்ணையும், பாறையையும் மேலே அள்ளி வந்து, காய்ச்சி தங்கக் கனியைப் பிரித்து, பின் அதை இரசாயன மாறுதல்களுக்குட்படுத்தும்போதுதான், தங்கம் ஒரு துளி கிடைக்கிறது. இது மிகமிகக் கடினமான வேலையாகும். ஆனால், இதைவிடக் கடினமானதாகும், தி. மு. கழகத்தின் பணி!

"எங்கெங்கோ, எப்படி எப்படியோ மறைந்துபோன உண்மைகளைக் கண்டு, அவற்றை மக்களுக்குக் கூறவேண்டியுள்ளது; அதுவும், மக்கள் மனதில் நிரம்பிக் கிடக்கும் புராண—இதிகாச—மத — கடவுள் பற்றிய மூடக் கருத்துக்கள், 'தேசிய' என்ற பெயரால் மக்கள் மனதில் புகுத்தப்பட்டுள்ள போலித் தத்துவங்கள், காந்தியார் போன்றவர்கள் தந்த போதனைகள் 'சுதேசமித்திரனு'ம், 'தினமணி'யும் அன்றாடம் நிரப்பிக் கொண்டிருக்கும் எதிர்வாதங்கள் இத்தனையையும் விலக்கிவிட்டு, தேடிப் பிடித்த—மறைந்துபோன உண்மைகளை மக்கள் பார்க்குமாறு செய்வது, மிக மிகக் கடினமான வேலையல்லவா?

"'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற மூல முழக்கம், இந்தத் தலைமுறையில், இந்த நாட்டு மக்களுக்குக் கிடைத்துள்ள கருவூலமாகும்—தங்கத்திலும் மேலான தங்கமாகும்! இந்த மூல முழக்கத்தை, நாட்டு மக்கள் ஏற்க மறுத்துவிடுவார்களேயானால், எதிர்காலத்தில், பிற்கால சந்ததிகள் காலத்தில், தென்னாட்டவர் அனைவரும் வடவரின் கூலிகளாய், அடிமைகளாய், நிரந்தரமானவர்களாகிவிடுவார்கள் என்பதால்தான், இந்தக் கருவூலத்தை நாட்டு மக்களிடையே விளக்குவது, எத்தனை கடினமானதாயிருந்தாலும், நம்மால் முடிந்தஅளவு செய்துவருகிறோம்.

"'திராவிட நாடு திராவிடருக்கே' என்று ஏன் முழக்கமிடுகிறோம்? உலகத்தில் இந்த நாட்டவரைப்போல் கடினமாக உழைப்பவர்கள் எங்காவது உண்டா? ஆனால், அதே போது, உலகத்தில், இந்த நாட்டவரைப்போல் தரித்திரர்களும் இல்லை; ஏன்? உலகத்தவர் பலரும் நம்மைவிடக் குறைவாக உழைத்துவிட்டு, நம்மைவிட வசதியான நல்வாழ்வைப் பெற்றிருக்கிறார்கள். நம்மால் மட்டும் முடிய வில்லையே, ஏன்?

"வாழ்க்கை, நமக்கேன் பெரிய பாரமாக—கஷ்டமானதாகத் தெரிய வேண்டும்? நாம் கட்டாத கோவில், வெட்டாத குளம், எடுக்காத விரதம், தொடுக்காத பூசை, இருக்காத நோன்பு, பார்க்காத கோவில், நீராடாத புண்ணிய நதி உண்டா? இருந்தும், நம்மால் ஏன் வாழ முடியவில்லை?"

—என்று, அண்ணா அவர்கள், 15—6—56 அன்று, இரவு 10-30 மணியளவில், தளவாய்புரம் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

"எனக்கு முன் இங்கு பேசியவர்களில் ஒருவர்—சமுதாயத்துறையில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ன கொள்கையைக் கொண்டிருக்கிறது என்பதையும், மற்றொருவர்—பொருளாதாரத் துறையில் கழகத்தின் திட்டம் என்ன என்பது குறித்தும், அரசியல் துறையில் கழகத்தின் இலட்சியம் என்ன என்பது குறித்தும் விளக்கிப் பேசினார்கள்.

"இப்படி, திராவிட முன்னேற்றக் கழகம் மக்களின் சமுதாய—பொருளாதார — அரசியல்துறைப் பிரச்சினைகள் அனைத்தையும் குறித்துக் கவலைப்படுவதாய் உள்ள ஒரு தேசிய இயக்கமாகும்; எல்லாப் பிரச்சினைகளையும் ஒருசேர ஆராயும் இயக்கமாகும்.

கம்யூனிஸ்டு கட்சி, தொழிலாள—விவசாய மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளைக் கவனித்துவிட்டால் நாடு சுபிட்சமடைந்துவிடும் என்று கூறி, நாட்டில் உள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் பற்றி மட்டும் பேசுகிறது இந்த ஏற்றத்தாழ்வுகள் ஒழிய வேண்டும் என்று கோருகிறது.

"சோஷலிஸ்டுகளும் ஏறத்தாழ அப்படித்தான்.

"காங்கிரஸ் அன்று, கூறிவந்தது எல்லாம், 'வெள்ளையன் வெளியேறிவிட்டால் போதும்; நாடு நலமாகிவிடும்,' என்று பேசிற்று; இன்று, வேறு ஏதேதோ பேசுகிறது

"ஆனால், தி. மு. கழகம்தான் மக்களைப் பிடித்துவாட்டுகிற எல்லாப் பிரச்சினைகளையும் பற்றிப் பேசுகிறது

"சமுதாயத் துறையில், மக்கள், பல்வேறு மூடப் பழக்கங்களுக்கு அடிமையாகிக் கிடப்பதிலிருந்து விடுபட வேண்டும் — எண்ணற்ற சாதிகளாய்ப் பிரிந்து, உயர்ந்தவன்—தாழ்ந்தவன், தீண்டப்படாதவன் என்றெல்லாம் பேதப்பட்டுக் கிடக்கும் நிலை மாறவேண்டும் என்று தி. மு. கழகம் கூறுகிறது.

"பொருளாதாரத் துறையில், நிலப் பிரபு—விவசாயி, முதலாளி—தொழிலாளி, ஆண்டான் — அடிமை என்ற நிலைகள் மாறி, மனிதனை மனிதன் சுரண்டாமல், 'சக்திக்கு ஏற்ற உழைப்பு — தேவைக்கு ஏற்ற வசதி' என்ற நிலை பெற்று மக்கள் வாழவேண்டும் என்று கழகம் எடுத்துரைத்து வருகிறது.

"அரசியல் துறையில், இந்த நாட்டு மக்களுக்கு ஒரு நல்லாட்சி வேண்டும் என்பதோடன்றி, அந்த ஆட்சி இந்த நாட்டவரின் ஆட்சியாக—சுதந்திர ஆட்சியாக இருக்க வேண்டும்; அதற்கு இந்த நாட்டு மக்களைப் புதிதாகப் பிணைத்திருக்கிற வடநாட்டு அடிமைத்தளை அறுபட்டாக வேண்டும் என்றும் கழகம் கூறுகிறது.

"ஆனால், நாட்டில் உள்ள சிலர் கழகத்தின் முழு உருவத்தையும், கழகம் கூறுகிற கொள்கைகள் அனைத்தையும் ஒருசேரக் காணாமல், கழகம் கூறுகிற ஏதாவது ஒரு கொள்கையை மட்டும் பற்றிக் கொண்டு, கழகத்தைப் பற்றிப் பேசுகிறார்கள்.

"பள்ளிப் பிள்ளைகள் கதை ஒன்று படிப்பார்கள்; சில குருடர்கள் யானையைக் காணப்போய், ஒவ்வொருவரும், அவரவர் கண்ட யானையின் பாகத்தையே மனதில் எண்ணிக்கொண்டு, 'யானை முறம் போல இருக்கும்; யானை சுவர் போல இருக்கும்'—என்று கூறியதாக! அதுபோலத்தான், கழகத்தை எங்கெங்கிருந்தோ தொலைவில் இருந்துபார்த்துவிட்டு, தங்கள் தங்களுக்குப் பட்டதை எடுத்துச் சொல்லி வருகிறார்கள்.

"காமராசரும், யானை பார்த்த குருடர்களில் ஒருவர்போல கழகத்தைப் பற்றி ஏதேதோ பேசி வருகிறார்; இதர கட்சியினரும், தங்கள் தங்கள் கண்ணுக்குப் படுவதை மட்டும் எடுத்துரைக்கிறார்கள்.

"இன்று, யாரேனும் நமது கழகத்தைப் பற்றிக் கூறும்போது, கழகத்தை நடத்துகிறவர்களைப் பற்றி வேண்டுமானால் பேசலாமே தவிர கழகத்தின் இலட்சியத்தை—கொள்கையைப் பற்றிக் குறை கூறிட முடியாது.

"கழகத்தை நடத்துகிறவர்கள் மட்டமானவர்கள்—சிலர் கூறலாம்; சாமானியமானவர்கள் — பலர் குறைபடலாம்; ஆனால் கழகம் கூறிவரும் கொள்கைகள் குறைவானவை என்று எவருமே கூறிட இயலாது.

"நாங்கள் எல்லாம் மட்டமானவர்களாக, சாமானியமானவர்களாக இருக்கலாம்; பணக்காரர்களாக இல்லாமலிருக்கலாம்; அல்லது பெரும் பயில்வான்களாக இல்லாதிருக்கலாம்; நான் தவறாமல், கூட்டங்களில் தொண்டை நீர் வற்ற வற்ற, அடிவயிறு வலிக்க வலிக்கப் பேசிப் பேசி, இருந்த வலிமையையும் தொலைத்துக்கொண்டவர்களாகவும் இருக்கலாம்; ஆனால், கழகத்தின் கொள்கைகள், மாசு மறுவற்றவை என்பதைப் பிறர் உணர்ந்துகொள்ளவேண்டும்.

"ஜஸ்டிஸ் கட்சி, பணக்காரர்களின் கட்சியாக இருக்கிறது என்பதால்தான், திராவிடர் கழகம் கண்டோம்; பின், அதனிலும் முற்போக்கானவர்களானபோது தி மு கழகம் அமைத்திருக்கிறோம்; கடந்த ஆறேழு ஆண்டுகளில், கழகம், மகத்தான வளர்ச்சியடைந்திருக்கிறது; மக்களின் பேராதரவைப் பெற்றிருக்கிறது.

இங்கே, எனக்கு, வரவேற்பு இதழ்கள் வாசித்தளித்தார்கள்—'வாழ்க' என்று, மகிழ்ச்சிப் பொங்க வாழ்த்துரை பகன்றார்கள்; இவை எல்லாம், இங்குள்ள மக்கள் கழகத்தின்மீது கொண்டுள்ள பற்றுதலை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

"உங்களை எல்லாம், நான் அடிக்கடி சந்திக்க முடியாமலிருக்கலாம் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறையோ, நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறையோ மட்டுமே சந்திக்கக் கூடிய வாய்ப்பைப் பெறமுடியும் ஆனாலும், இங்குள்ள மக்கள், கழகத்திடம் நீங்காத தொடர்புகொண்டிருக்கிறார்கள் என்பதை மக்கள் இங்கு பல்லாயிரக்கணக்கில் கூடியிருப்பதைக் கண்டு உணரமுடிகிறது.

"இன்றுதான், நாட்டு மக்களில் பெரும்பாலானோர்—கூனிக் குறுகிக் கிடந்தவர்கள்—நிமிர்ந்து உட்கார்ந்து, 'என்ன கூறுகிறார்கள்?' என்று கேட்க முற்பட்டிருக்கிறார்கள்.

"சிறுகச் சிறுக, கழகத்தின் பக்கம் வந்துகொண்டிருக்கிறார்கள்.

"இந்த அளவுக்கு மக்களை கழகத்தின் பக்கம் ஈர்ப்பதற்கே, கழகத்தவர் பட்டுள்ள கஷ்ட நஷ்டங்கள் சாமானியமானவை அல்ல—தடியடி, கண்ணீர்ப் புகை, துப்பாக்கிப் பிரயோகம், சிறைச்சாலை இவைபோன்ற அடக்குமுறைகள், அத்தனையையும் அனுபவித்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் மேலாக, ஏச்சுப் பேச்சுக்களை, கேலி கிண்டல்களைத் தாங்கியிருக்கிறார்கள். இத்தனைக்கும் பிறகு மக்களின் நலன்களுக்காகப் பிடிவாதத்துடன் கழகம் பாடுபடுவதைக் கண்ட பின்னர்தான், மக்கள், கழகத்திற்கு, தங்களிடையே இடம் தந்திருக்கிறார்கள். அப்படிக் கிடைத்திருக்கிற இடம் நிரந்தரமானது மட்டுமின்றி, நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருவதுமாகும் என்பதையும் நாம் காண்கிறோம்.

"கழகம், இன்று மேற்கொண்டுள்ள பணி சாதாரணமான பணி அல்ல!

"பாரதம் பெரிய விஷயம்தான்! காரைக்கால் அம்மையார் சரிதம் அதைவிடப் பெரிய விஷயம்! இந்தப் பெரிய விஷயங்களை விளக்குவதை விட—மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதைவிட, கழகம் ஈடுபட்டுள்ள பணி, மிகப் பெரிய கடினமான பணியாகும்.

"ஆராய்ச்சியாளர்களின் பணி, கடினமானதுதான். இங்கே—தளவாய்புரத்திலிருந்து எட்டு மைல் தொலைவில், நடுக்காட்டில், 40 அடி ஆழத்தில் ஒரு கோட்டை இருந்ததற்கான சின்னங்கள் கிடைப்பதாக வைத்துக்கொள்வோம். கிடைத்துள்ள அந்தச் சின்னங்களை வைத்துக்கொண்டு—இந்தக் கோட்டை எந்தக்காலத்தில் எழும்பியது? எவர் எழுப்பினார்? எத்தனை காலம் பழக்கத்திலிருந்தது? எப்படி அழிந்தது? எவரால் அழிந்தது? ஏன் அழிந்தது? அழிந்து எத்தனை காலமாயிற்று?—என்பன போன்ற விஷயங்களை ஆராய்ந்து அறியும், ஆராய்ச்சியாளரின் வேலை, மிகக் கடினமானதுதான்; ஆனால், அதைவிடக் கடினமானது, கழகம் மேற்கொண்டுள்ள பணி!

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

தென் ஆற்காடு மாவட்டத்தில்:

என். வி. நடராசன்

சுற்றுப் பயணம்

ஜுன் 27 : சோழபாண்டியபுரம்
,, 28 : அரசம்பட்டு
,, 29 : சோழம்பட்டு
,, 30 : உலகுடையாம்பட்டு

★★★★★-★★★★-★★★★★★★★

கிளைக் கழகச் செயலாளர்களுக்கு :

★

தி. மு. கழக உறுப்பினர் உரிமைச் சீட்டு, 22—6—56 முதல் அந்தந்த கிளைகளுக்குத் தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்டு வருகிறது.

கிளைக் கழகச் செயலாளர்கள், அந்தந்த உறுப்பினர்களுக்கு உரிமைச் சீட்டை உடனடியாக வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

என். வி. நடராசன்
'அறிவகம்' சென்னை-13 22-6-56
துணைப் பொதுச் செயலாளர் தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★-★★-★★

சென்னை கைத்தறிக்கு

அமெரிக்காவில் கிராக்கி!

1,40,000 கெசம் சென்னை லுங்கி துணிக்கு ஒரு அமெரிக்க வியாபாரி ஆர்டர் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இதில் பாதியளவு ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டது.

ஹெரால்டு சாமுவேலும் மற்றொரு அமெரிக்க வியாபாரியான கோல்கேமும் சமீபத்தில் இந்தியாவுக்கு வந்து இந்தியக் கைத்தறித் துணிக்கு பெரிய ஆர்டர் கொடுக்கும் சாத்தியக் கூறுகளைப் பற்றி ஆராய்ந்தது இங்கு குறிப்பிடத்தகுந்தது.

அமெரிக்காவில், இந்தியக் கைத்தறித் துணிக்கு அதிக கிராக்கி இருந்துவருகிறது. அமெரிக்காவில் கிராக்கியாயிருக்கக்கூடிய மாதிரிகளைப் பற்றியும் அவர்கள் உற்பத்தியாளர்களுக்கு யோசனைகள் கூறினார்கள்.

கூடியவிரைவில், சென்னை லுங்கி துணி 10 இலட்சம் கெசத்திற்கு ஆர்டர் கிடைப்பது சாத்தியம் என சாமுவேல் நம்பிக்கை தெரிவித்தார்.

சென்னை ஜார்ஜ்டவுன் பவழக்காரத் தெருவிலிருக்கும் கிருஷ்ணன் கோவில் தாயார் சந்நிதியிலிருந்து சுமார் ரூ 300 மதிப்புள்ள நகைகள் களவு போய்விட்டன எனத் தெரிகிறது.

கிளைக் கழகச் செயலாளர்களே—உங்கள் ஊரிலுள்ள கழகத் தோழர்கள், தங்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்து கொண்டார்களா — இல்லையெனில், அதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.